**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

STC.No.387/2025

Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : கோட்டைச்சாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ஆறுமுகம் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

07.03.2026

(1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கீழத்தூவல் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.துரைச்சாமி மற்றும் புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கரன் ஆகியோர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவர்கள் என்னுடன் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.10.2025ம் தேதி இரவு 22.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.துரைச்சாமி கீழத்தூவல் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பரமக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திருவரங்கம் தெற்கு தெருவை சேர்ந்த ராஜேந்திரன், த.பெ.முனியசாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காலை 08.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.148/2025 பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2) சார்பு ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கரன் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லதா மற்றும் சாத்தையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளான ராஜேந்திரன், சத்தியபிரியன், சண்முகவள்ளி, ஆனந்தி, காளியம்மாள், லதா மற்றும் சாத்தையா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரிகளை தேடிவந்த நிலையில் 21.10.2025 ம் தேதி 09.30 மணிக்கு காவல்நிலையத்தில் ஆஜரான 1ம் எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்துதக்கபிணையத்தில் விடுவித்துள்ளார். 2ம் எதிரியை 08.11.2025 ம் தேதி 11.00 மணிக்கு கைது செய்துதக்கபிணையத்தில் விடுவித்துள்ளார்.

4) இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 மற்றும் அசா.2 க்கு சிகிச்சை அளித்த பரமக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.காருண்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் அவர்கள் அசா.1 தன்னிச்சையாக சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து கூற இயலாது என்று சான்று வழங்கியுள்ளார். அசா.2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதையும் பெற்றுள்ளார். **அசா.1 வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசா.ஆ.7 ஆகவும், அசா.2 க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

5) அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை

என்றால் சரியல்ல.